<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திரு.P.குமார் சிங், | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் |
| ஆணையாளர், | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம், | |
| கடையநல்லூர். | |

**ந.க.எண். 45/2020/சி1 நாள்: .01.2021**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி –அவசரக் கூட்டம் 07.01.2021 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 07.01.2021 அன்று அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 07ம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5060/2020/தி1 நாள்.17.10.2020 மற்றும் 03.12.2020ம் தேதிய கடிதத்தில் சட்ட பேரவை விதி 110ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையில், நகராட்சிப் பகுதிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் 100 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்திலும் மற்றும் யோகாமையம் 120சதுரமீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்தில் அமைக்கப்படும் என தெரிவித்துள்ளார்கள் அரசாணை(4ப) எண்.6 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள்.03.09.2020ல் நகர்புற இளைநர்கள் மற்றும் அனைத்து வயதினரிடத்திலும் உடற்பயிற்சி பழக்கத்தினை ஊக்குவிக்கும் வகையிலும், உடல் நலத்திற்கு முக்கியத்துவம் அளித்து உடற்பயிற்சி வாயிலாக உடல் வலிமை மற்றும் யோகா பயிற்சியின் வாயிலாக மனவலிமையினை அதிகரிக்கும் வகையிலும் குறிப்பாக இளைஞர்களை விளையாட்டுத்துறையில் அதிகஅளவில் பங்கேற்க செய்ய தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுத்திட நகராட்சியில் போதிய இடவசதி உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் பூங்காகளில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் யோகா மையம் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்க கீழ்காணும் விபரப்படி இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சிப் பகுதி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் தேரடி திடலில் யோகா மையம் அமைக்கும் பணி. | ரூ.9.98/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சிப் பகுதி வார்டு எண்.29 வாரச்சந்தை வளாகம் தென்புறம் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணி. | ரூ.9.80/– |

மேலும் இந்நகராட்சிப் பகுதியில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் யோகா மையங்களை ஏற்படுத்த பொதுநிறுவனங்கள், தனியார்பங்களிப்பு மற்றும் உள்ளாட்சி பொதுநிதியினை பயன்படுத்தி ஒரே மாதிரி ஏற்ப்படுத்திடவும் தொடர்பராமரிப்பு செய்யும் வகையிலும் செயல்படுத்திட வேண்டும் எனவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**(ந.க.எண்.4025/2020/இ1)**

**தீர்மான எண். 339**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

கடையநல்லூர் நகராட்சி 1முதல்33 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் பகுதிகளுக்கு குளோரின் கலந்த குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் குளோரின் பிளாண்ட்டுகள் அமைத்து செயல்ப்பட்டு வரப்படுகின்றது. அதனடிப்படையில் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.3234/2019/இ1 நாள்.29.11.2019ன்படி இந்நகராட்சிப் பகுதிகளிலுள்ள 12 எண்ணம் குடிநீர் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள குளோரின் பிளாண்டுகளில்

அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை ஆண்டு பராமரிப்பு (**Annual maintenance**) பணிகளின் கீழ் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டுவரப்பட்டது. இந்நிலையில் மேற்காணும் பணிக்கான பராமரிப்பு காலம் 11/2020ம் தேதியுடன் முடிவுற்றுள்ளது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் இந்நகராட்சிப் பகுதியிலுள்ள 12 எண்ணம் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலுள்ள குளோரின் பிளாண்டுகளை மீண்டும் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகளை மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.87/2021/இ1)**

**தீர்மான எண். 340**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் TN76AM 7462, TN76AM 7465, TN76AM 7479, TN76AM 7486, ஆகிய நான்கு மினி ஆட்டோக்களுக்கு இலவச சர்வீஸ் மற்றும் ஆயில் மாற்றம் செய்திட பொது சுகாதார அவசியம் கருதி அதன் டீலரான SUSEE AUTO ZONE(P)Ltd, Surandai நிறுவனத்தில் மேற்கொண்ட வகைக்கு செலவினம் ரூ.6700/–(ரூபாய் ஆறாயிரத்தி எழுநூறு மட்டும்) வழகியதற்கு அனுமதியும் , மேலும் இதர இரண்டு மினி ஆட்டோக்கள் TN76AP 4394, TN76AP 4374 வாகனத்திற்கு இதே நிறுவனத்திடம் இலவச சர்வீஸ் மற்றும் ஆயில் மாற்றம் செய்திடவும் மற்றும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.4000/–(ரூபாய் நான்காயிரம் மட்டும்)ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.3883/2020/எச்1)**

**தீர்மான எண். 341**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.22 இந்திராநகர் புதுக்காலணி கிழமேல் 1வது தெருவில் மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.307 நாள்– 11.12.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 07.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஓப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு . G.முப்புடாதி<br>ஓப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 0.05%<br>குறைவு | ரூ.6000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008402 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு .G. முருகன்<br>ஓப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 0.53%<br>அதிகம் | ரூ.6000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008403 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. G.முப்புடாதி ஓப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3799/2020/இ1)**

**தீர்மான எண். 342**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.22 காமாட்சியம்மன் கோவில் (இந்திராநகர்) மற்றும் வார்டு எண்.25 பவுண்டுத்தெருவில் உள்ள வடிகால்கள் முற்றிலும் சிதிலமமைந்துள்ளதை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழை நீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலங்கள் ரூ.995000/– மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.309 நாள்–11.12.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 07.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரா் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு . M.மாடசாமி.<br>ஒப்பந்தக்காரா்.<br>கடையநல்லூா். | 0.08%<br>குறைவு | ரூ.9950/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008400 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளாா். |
| திருமதி . M.மகேஸ்வாி.<br>ஒப்பந்தக்காரா்.<br>கடையநல்லூா். | 0.67%<br>அதிகம் | ரூ.9950/–க்கான SBI KDNR வரைவோலை எண். 646028 நாள். 06.01.2021 ன் படி சமா்பித்துள்ளாா். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. M.மாடசாமி ஒப்பந்தக்காரா் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளாா். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2224/2020/இ1)**

**தீா்மான எண். 343**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.24 பண்பொழி ரோடு கட்டிவிநாயகர் கோவில் சன்னதி தெரு மற்றும் வார்டு எண்.26 மேற்கு மலம்பாட்டை குறுக்குத்தெரு, கட்டிவிநாயகர் கோவில் தென்வடல் தெருவிலுள்ள வடிகால்கள் முற்றிலும் சிதிலமமைந்துள்ளதை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழை நீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலங்கள் ரூ.990000/– மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.308 நாள்–11.12.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 07.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரா் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு . M.மாடசாமி,<br>ஒப்பந்தக்காரா்.<br>கடையநல்லூா். | 0.08%<br>குறைவு | ரூ.9900/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008401 நாள். 06.01.2020 ன் படி செலுத்தியுள்ளாா். |
| திருமதி . M.மகேஸ்வாி.<br>ஒப்பந்தக்காரா்.<br>கடையநல்லூா். | 0.64%<br>அதிகம் | ரூ.10000/–க்கான SBI KDNR வரைவோலை எண். 646027 நாள். 06.01.2021 ன் படி சமா்பித்துள்ளாா். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. திரு . M.மாடசாமி ஒப்பந்தக்காரா் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளாா். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2867/2020/இ1)**

**தீா்மான எண். 344**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.1முதல் 33 வரையுள்ள வார்டுகளில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் பெரியாற்றுப்படுகை கல்லாறு பெரியநாயகம் கோவில் இடைநிலை நீருந்து நிலையம் முதல் குமந்தாபுரம் மற்றும் முத்துக்கிருஷ்ணாபுரம் வரையுள்ள நீரேற்றும் குழாய்கள் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகளை பழுதுகள் நீக்கம் செய்யும் பணியினை **(ஒரு ஆண்டிற்கு)** ரூ.595000/– மதிப்பீட்டில் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.312 நாள்–11.12.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 07.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு . K.S.அப்துல் மாலிக்.<br>ஒப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 0.004%<br>குறைவு | ரூ.5950/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008404 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. P.M.அசன் முகம்மது.<br>ஒப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 0.06%<br>அதிகம் | ரூ.5950/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008408 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.004%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு . K.S.அப்துல் மாலிக் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4322/2020/இ1)**

**தீர்மான எண். 345**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.1முதல் 33 வரையுள்ள வார்டுகளில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் பொருத்தப்பட்டுள்ள சுலீஸ் வால்வுகள் கல்லாறு பெரியநாயகம் கோவில், பெரியாற்றுப்படுகை, முதல் குமந்தாபுரம் வரையுள்ள நீரேற்றும் குழாய்களில் இணைக்கப்பட்டுள்ள சுலீஸ் வால்வுகள் ஏர்வால்வுகள் மற்றும் நகரில் உள்ள 13 குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி வளாகங்களிலுள்ள சுலீஸ் வால்வுகள் ஸ்கவர் வால்வுகள் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகளை பழுதுகள் நீக்கம் செய்யும் பணியினை **(ஒரு ஆண்டிற்கு)** ரூ.300000/– மதிப்பீட்டில் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.313 நாள்–11.12.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 07.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு . K.S.அப்துல் மாலிக்.<br>ஒப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 0.84%<br>குறைவு | ரூ.3000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008405 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. P.M.அசன் முகம்மது.<br>ஒப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 1.27%<br>அதிகம் | ரூ.3000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008409 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.84%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு . K.S.அப்துல் மாலிக் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி

கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4322/2020/இ1)**

**தீர்மான எண். 346**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.4 செவல்விளை3ம்தெரு, எண்.2 கோபாலகிருஷ்ணசாமி கோவில் தெருவில் உள்ள சிறுமின்விசை தொட்டிக்கு புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் பொருத்தும் பணிக்கும் மற்றும் வார்டு எண்.28 சந்தைதெருவில் உள்ள ஆழ்துளை கிணறுக்கு புதிதாக சின்டெக்ஸ் தொட்டி அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணியினையும் ரூ.400000/– மதிப்பீட்டில் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.310 நாள்–11.12.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 07.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு . K.S.அப்துல் மாலிக்.<br>ஒப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 0.32%<br>குறைவு | ரூ.4000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008406 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. P.M.அசன் முகம்மது.<br>ஒப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 1.04%<br>அதிகம் | ரூ.4000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008410 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.32% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு . K.S.அப்துல் மாலிக் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4365/2020/இ1)**

**தீர்மான எண். 347**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.22 வேதக்கோவில் தெற்குத்தெரு, எண்.28 பெண்கள் பள்ளிக்கூடம் தென்வடல்(சந்து) மற்றும் வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 8ம்தெருவின் வடபகுதி ஆகிய இடங்களில் புதிதாக குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிக்கு ரூ.260000/– மதிப்பீட்டில் இந்நகராட்சி தனிஅலுவலரின் முன் அனுமதி நாள்–23.12.2020ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 07.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு . K.S.அப்துல் மாலிக்.<br>ஒப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 0.44%<br>குறைவு | ரூ.2600/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008407 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. P.M.அசன் முகம்மது.<br>ஒப்பந்தக்காரர்.<br>கடையநல்லூர். | 3.68%<br>அதிகம் | ரூ.2600/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008411 நாள். 06.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.44%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு . K.S.அப்துல் மாலிக் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3993/2020/இ1)**

**தீர்மான எண். 348**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–2021ன் கீழ்** கடையநல்லூர் நகராட்சி – வார்டு 13 இக்பால் நகர் மற்றும் கொசவன்குன்று தெப்பம் கிழக்கு மற்றும் வடக்கு பகுதியை சுற்றி நடைபாதை மற்றும் அலங்கார விளக்குகள் அமைத்தல் பணியினை ரூ.700000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ8/429/2020 நாள் 03.12.2020ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் பணியினை செய்ய 07.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P. சாகுல்கமீது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.09%<br>குறைவு | ரூ.7000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008444 நாள். 07.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. M. இராஜேந்திரபிரசாத்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 2.30%<br>அதிகம் | ரூ.7000/–க்கான KVB வங்கி வரைவோலை எண். 336806 நாள். 07.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.09%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P. சாகுல்கமீது ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3644/2020/இ1)**

**தீர்மான எண். 349**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–2021ன் கீழ்** கடையநல்லூர் நகராட்சி 1வது வார்டு குமந்தாபுரம் பூங்கா அருகில் கிணற்றில் மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல் பணியினை ரூ.100000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ8/429/2020 நாள் 03.12.2020ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் பணியினை செய்ய 07.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஓப்பந்தக்காரர் பெயர் | ஓப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. K.S.அப்துல் மாலிக். ஓப்பந்தக்காரர், கடையநல்லூார். | 0.28% குறைவு | ரூ.1000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008442 நாள். 07.01.2021ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு.P. சாகுல்கமீது, ஓப்பந்தக்காரர், கடையநல்லூார். | 2.77% அதிகம் | ரூ.1000/– செல்லாண் எண். 141/001/2/20–21/0008443 நாள். 07.01.2021 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.28%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக், ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3644/2020/இ1)**

**தீர்மான எண். 350**

அனுமதிக்கப்பட்டது.

(ஓம்)P.குமார் சிங்
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.